2023 ஏப்ரல் 20] [திரு. துரைமுருகன்]

உண்மை, உண்மையைத் தவிர வேறல்ல. அதேபோன்று நான் சொல்லப்போவதும் உண்மை, உண்மையைத் தவிர வேறல்ல. இவர்கள் சொன்னவற்றை நான் மறுபடியும் சொல்ல விரும்பவில்லை. ஒன்றைச் சொல்கிறேன். இத்திட்டம் சரியான திட்டம் என்கிற அடிப்படையில்தான் சென்ற ஆட்சியிலேயே 24–2–2021 அன்று ஓர் அரசாணை வெளியிட்டார்கள். ஆனால், தேர்தல் வந்ததால், ஒப்பந்தப்புள்ளி கோராமல் சென்றுவிட்டார்கள். நாங்கள் இப்போது ஒப்பந்தப்புள்ளி கோரலாமா என்று முயற்சி செய்தோம். ஒரு பலத்த எதிர்ப்பு, கம்பம் பள்ளத்தாக்கிலிருந்து வந்தது. நீங்கள் கேட்கிறீர்கள் என்பதனால் செய்திட முடியாது. அவர்களை அழைத்து சமாதானம் செய்தபிறகுதான், இன்னொரு திட்டத்தை எடுக்க முடியும். அத்திட்டத்தை நான் இப்போது LBP*-ல் செய்து கொண்டிருக்கிறேன். ஆகையால், அவர்களை அழைத்து சமாதானம் செய்து, "இத்திட்டத்தினை மேற்கொள்ளலாம், நல்ல திட்டம்தான்" என்று சொல்ல வேண்டும். தற்சமயம் அவர்கள் இத்திட்டத்தினை ஒப்புக்கொண்டாலும், சென்ற ஆட்சியில் இத்திட்டத்திற்கான அரசாணை வெளியிடும்போது, இதன் மதிப்பீடு 91 கோடி ரூபாய். இன்றைக்கு என்னுடைய கணக்கின்படி* Revised Estimate *போட்டுப் பார்த்தால், ரூ.120 கோடி அல்லது ரூ.130 கோடி ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* P.T.R. *இருந்தார் என்று சொன்னார். இப்போது அவர்* son *இருக்கிறார்; அவர் ஊர்க்காரர்தான். 120 கோடி ரூபாய் அவர் ஒதுக்கீடு செய்து தருகிறார் என்றால் இத்திட்டத்தினைச் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் நிதிநிலைமை எப்படி இருக்கிறதென்பதை நான் சொல்வதைவிட மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்தான் சொல்ல வேண்டும். எனவே, அவர் உண்டு, அவர் தொகுதி உண்டு என்பதைத் தெரிவித்து, அவர் கொடுத்தால் உண்டு, இல்லையென்றால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.*

(ஆ) சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை, முண்டியம்பாக்கம் அருகில் அமையவுள்ள மேம்பாலத்தை ஒரத்தூர் பிரிவு சாலை வரை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

[*2023 ஏப்ரல் 20*

முற்பகல் 11–50

***திரு. ச. சிவகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அருகில் அமைய உள்ள மேம்பாலத்தை ஒரத்தூர் பிரிவு சாலை வரை நீட்டிக்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்கள் மேசையின் மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அறிக்கை

சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலை (NH *45*) *இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்* (NHAI) *மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர் கோரும் முண்டியம்பாக்கம்–ஒரத்தூர் பிரிவு சாலை கி.மீ. 154/280* (Black Spot ID No TN*–02–073*) *மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி எதிரில் கி.மீ. 154/730–ல்* (Black Spot ID No TN*–91–01*) *இரண்டு விபத்து பகுதிகளையும் இணைத்து விபத்துத் தடுப்பு நடவடிக்கைக்காக* (Black Spot Improvement) *பாலங்களில் ஒரு வகையான வாகன சுரங்கப் பாதை* (VUP) *மற்றும் வரையறுக்கப்பட்ட இலகு இரக வாகன சுரங்கப் பாதை* (LVUP) *ரூ.60.00 கோடி (நில எடுப்பு உட்பட) மதிப்பீட்டில் அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பரிசீலனையில் உள்ளது. மேலும், இதில் கூடுதல் நில எடுப்புப் பணிக்காக ரூ.17.245 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயனாளர்களுக்கு இழப்பீடு தொகை வழங்கப்பட்டது என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் ஒரே கேள்வியாகக் கேட்டு முடித்துவிடுங்கள். ஒரே பதிலாக சொல்லிவிடுவார்கள்.*

2023 ஏப்ரல் 20]

திரு.ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்து பரிசீலனையில் உள்ளதாகவும், மேலும், 17.245 கோடி ரூபாய் கூடுதலாக நில எடுப்பிற்காக ஒதுக்கீடு செய்து, நிலம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, முண்டியம்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மட்டுமல்ல, அருகில் 300 மீட்டரில் ஒரத்தூர் பிரிவு சாலையும் உள்ளது. அடுத்த 200 மீட்டரில் ஒரு சர்க்கரை ஆலையும் உள்ளது. ஆகவே, தமிழ்நாட்டில் முக்கிய தேசிய நெடுஞ்சாலையான சென்னை-திருச்சி மட்டுமல்ல, மதுரை, தூத்துக்குடி வரையிலும் தேசிய நெடுஞ்சாலையாக உள்ளதால், கிட்டத்தட்ட 4 ஆண்டுகளில் திருச்சி-சென்னை சாலையில் 2,100 பேர் விபத்தில் மரணமடைந்துள்ளார்கள். கிட்டத்தட்ட 6,300-க்கும் மேற்பட்ட விபத்துகள் நடைபெற்றுள்ளன. தேசிய நெடுஞ்சாலையில் கிட்டத்தட்ட 7,500 பேர் விபத்துக்குள்ளாயிருக்கின்றனர். ஆகவே, மருத்துவமனைக்கு வரக்கூடிய அனைவருக்கும் போக்குவரத்து நெரிசலாலும், அதேபோல விவசாய பயிர்களை எடுத்துச் செல்லும்போது கரும்பு* tractors*மூலம் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலாலும் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த இரண்டு வழிகளையும் சேர்த்து மேம்பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நெடுஞ்சாலை* NH *45, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. முண்டியம்பாக்கம்-ஒரத்தூர் பிரிவு சாலை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி எதிரிலே 2 விபத்து பகுதிகளை இணைத்து முண்டியம்பாக்கத்திலே வாகனங்கள் சுரங்கப் பகுதியும் மருத்துவக் கல்லூரி அருகிலே வரையறுக்கப்பட்ட இலகு இரக வாகனங்கள் சுரங்கப் பாதையும் ரூ.60 கோடி மதிப்பீட்டில் அமைப்பது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பரிசீலனையில் இருக்கிறது. இரு பாலங்களும் இணைத்து அமைக்கப்பட்டுள்ளதால், சட்டமன்ற உறுப்பினர் கோரியபடி முண்டியம்பாக்கம் பிரிவு பாலம் நீட்டிக்கப்படவும், இதை உடனே செய்து முடிப்பதற்காக*

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 20

ஏற்கெனவே NHAI-லே இருக்கிற பல்வேறு துறையைச் சார்ந்த அதிகாரிகளிடத்திலே தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் எழுதியிருக்கிறோம். அதை விரைந்து முடிப்பதற்கு இந்த அரசு வேண்டிய முயற்சிகளை எடுக்கும்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*